போய்ச் சேரவில்லை என்ற புகார் இருக்கிறது. உடனுக்குடன் அந்தப் பணம் அவர்களுக்குப் போய்ச் சேர நடவடிக்கை எடுக்கப் படுமா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, கோ-ஆப்டெக்ஸ் என்ற மாநில பிரதம சங்கம் பல்வேறு இடங்களிலே உள்ள கூட்டுறவு நெசவாளர் சங்கங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்ற துணிகளைக் கொள்முதல் செய்கிறது, அதை விற்பனை செய்து வருகிறது. பல்வேறு சங்கங்களில் உற்பத்தியாகும் ஏற்றுமதி ரகங்களை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் கொள்முதல் செய்து கோ-ஆப்டெக்ஸ் இண்டர் நேஷனல் நிறுவனத்தின் மூலமாக ஏற்றுமதி செய்கிறது. பிரதம சங்கத்திலிருந்து கொடுக்கக்கூடிய தொகை அவரவர்களுக்குப் போய்ச் சேருவதற்குக் காலதாமதம் ஆகிறது என்று சொன்னார்கள். காலதாமதம் தவிர்க்கப்பட்டு ஒரு மாதத்திற்குள்ளாக அந்தத் தொகை அவர்களுக்குப் போய்ச் சேரவேண்டுமென்று இப்போது அரசு அதிலே மிக தீவிரமாக கவனம் செலுத்தி அந்தத் தாமதம் தவிர்க்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

2. அறிவிப்பு.

ஆளுநர் செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து 21—2—1979 ஆம் தேதியிடப்பெற்ற செய்தி வரப்பெற்றுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''நான் 9—2—1979 ஆம் தேதியன்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நிகழ்த்திய உரைக்கு உங்கள் நன்றியறிவிப்புத் தீர்மானம் கிடைக்கப் பெற்றமைக்கு எனது மன நிறைவைத் தெரிவித்துக் கொள்கிறேன்.,,